**முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்.**

செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்த போது கிடைக்கும் பெரும்பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

**திருக்குறள் (எண்: 676) *அதிகாரம்: வினைசெயல்வகை***

# கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன் வழங்க முயற்சி

**சென்னை, நவ. 28:** கூட்டுறவு வங்கிகள் மூலமாக பயிர்க் கடன்கள் வழங்குவது போன்று, கல்விக் கடன்களையும் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறையில் மாவட்டப் பதிவாளர்கள், வங்கியின் மேலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், அமைச்சர் பெரியகருப்பன் கூறியதாவது:

கூட்டுறவுத் துறை எதிர்பார்த்ததைவிட கூடுதலாக வளர்ந்திருப்பதைக் காண முடிகிறது. ஏராளமான மக்களுக்கு சேவை செய்யும் துறையாக விளங்குகிறது.

கூட்டுறவு வங்கிகளின் மூலமாக, எளிமையான கடன்களை வழங்கி வருகிறோம். கால்நடைகளை வாங்குவதற்கு புதிய கடன்களை வழங்குவதுடன், பராமரிக்கும் செலவுக்காக ஆண்டுக்கு ரூ.15,000 வட்டியில்லாத கடனாக வழங்கி வருகிறோம். இரண்டரை ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகளில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.



கடந்த 10 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் பயிர்க் கடன்களாக ரூ.60,000 கோடி அளவுக்கு மட்டுமே அளிக்கப்பட்டது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும், கடந்த 2021-22-ஆம் ஆண்டில் ரூ.10,000 கோடியைத் தாண்டி பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நிதியாண்டு ரூ.12,000 கோடிக்கு இலக்கு நிர்ணயித்து, ரூ.13,400 கோடி அளவில் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டன. நிகழ் நிதியாண்டு ரூ.16,500 கோடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கையும் நிச்சயம் எட்டுவோம். பயிர்க் கடனைப் போன்று அனைத்து வகையிலும் இலக்குகளைக் கடந்து கடன்களை வழங்கி வருகிறோம்.

**வங்கிச் சேவைகள்:** கூட்டுறவுத் துறை வங்கிகள் போட்டியாளர்களைச் சமாளித்து வரவேற்பைப் பெற்று வருகின்றன. நிகழ் நிதியாண்டில் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கான அளவு ரூ.1.04 லட்சம் கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ.30,000 கோடி அதிகமாகும்.

காலத்துக்கு ஏற்ப கூட்டுறவு வங்கிகளில் நவீனமான பல உத்திகளைச் செய்து வருகிறோம். அதன் பலன்கள் அனைத்தும் ஓரிரு மாதங்களில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் போய்ச் சேரும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைப் போன்று கூட்டுறவு வங்கிகளிலும் கல்விக் கடன் வழங்குவதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுவோம் என்றார்.

முன்னதாக, ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலர் கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# சிறப்பு நீதிமன்றங்கள் திட்டத்தை 3 ஆண்டுகள் நீட்டிக்க ஒப்புதல்



புது தில்லி, நவ. 28: பாலியல் வன்கொடுமை வழக்குகளில் விரைந்து தீர்ப்பு வழங்கும் சிறப்பு நீதிமன்றங்கள் திட்டத்தை 3 ஆண்டுகள் நீட்டிக்க பிரதமர் மோடி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

குற்றவியல் திருத்தச் சட்டம் 2018-இன் கீழ் 1,023 விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க மத்திய அரசு முடிவெடுத்தது. தில்லியில் நிர்பயா என்ற பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதையடுத்து, இது போன்ற வழக்குகளில் விரைவாக குற்றவாளிகளைத் தண்டிக்க அரசு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதில் 389 சிறப்பு நீதிமன்றங்கள் போக்சோ வழக்குகளில் விரைவாக குற்றவாளிகளைத் தண்டிக்க 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தொடங்கப்பட்டன.

தற்போது 1,023 சிறப்பு நீதிமன்றங்களில் 754 மட்டுமே செயல்பாட்டில் உள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இத்திட்டம் நிகழாண்டு மார்ச் 31-இல் நிறைவடைந்தது. இதையடுத்து முறையாக நிதி ஒதுக்கப்பட்டு மீண்டும் திட்டத்தை தொடர மத்திய சட்ட அமைச்சகம் முயற்சிகள் மேற்கொண்டது. இந்நிலையில் 'விரைவு சிறப்பு நீதிமன்றங்கள்' திட்டத்தை 3 ஆண்டுகள் நீட்டிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

**பாரத யாத்திரை:** மத்திய அரசின் திட்டங்களை அனைவருக்கும் கொண்டுசெல்லும் 'வளர்ச்சியடைந்த பாரத யாத்திரையில்' (விகசித் பாரத் சங்கல்ப யாத்ரா) அமைச்சர்கள் அனைவரும் உத்வேகத்துடன் பங்கேற்குமாறு பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சர்கள் குழு கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 2.55 லட்சம் கிராமங்களையும் சென்றடையும் விதமாக 2500 வேன்களும், 200 திரையிடப்பட்ட வேன்களும் இந்த யாத்திரைக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஜார்க்கண்ட் மாநிலம் குந்தியில் பிரதமர் மோடியால் நவம்பர் 15-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த யாத்திரை 2024, ஜனவரி 25-ஆம் தேதியுடன் நிறைவு பெறுகிறது.

# 'இன்னுயிர் காப்போம்' திட்டத்தின் கீழ் 2 லட்சம் பேர் பயன்: சிகிச்சைக்கு ரூ. 173 கோடி ஒதுக்கீடு

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**



குரோம்பேட்டை ரேலா மருத்துவமனையில் 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் –48' திட்டத்தின் கீழ் 2 லட்சமாவது பயனாளியை செவ்வாய்க்கிழமை சந்தித்து நலம் விசாரித்த மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். உடன், துறையின் செயலர் ககன்தீப் சிங் பேடி, ரேலா மருத்துவமனை இயக்குநர் முகமது ரேலா, மருத்துவமனை தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் டாக்டர் ரவிபாபு.

**சென்னை, நவ. 28:** தமிழகத்தில் 'இன்னுயிர் காப்போம்; நம்மைக் காக்கும்-48' திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 2 லட்சத்தைக் கடந்துள்ளதாகவும், தமிழக அரசு இதுவரை அதற்காக ரூ.173.77 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சாலை விபத்துகளில் சிக்குவோருக்கு தாமதமின்றி கட்டணமில்லா சிகிச்சைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் 'இன்னுயிர் காப்போம்; நம்மைக் காக்கும் -48' திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தத் திட்டத்தின் 2 லட்சமாவது பயனாளி குரோம்பேட்டையில் உள்ள ரேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இருசக்கர வாகன விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்று வரும் அந்தக் கல்லூரி மாணவரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து நலம் விசாரித்தார்.

தாம்பரம் மாநகராட்சி மேயர் கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், ரேலா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் முகமது ரேலா, தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் டாக்டர் ரவிபாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அப்போது, செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

தமிழகத்தில் 'இன்னுயிர் காப்போம்' திட்டத்தை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 2021 டிச.18-ஆம் தேதி தொடக்கி வைத்தார். மாநிலம் முழுவதும் 237 தனியார் மருத்துவமனைகள், 455 அரசு மருத்துவமனைகள் என மொத்தம் 692 மருத்துவமனைகள் இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தில் முதல் பயனாளியை மேல்மருவத்தூரிலும், 50 ஆயிரமாவது பயனாளியை சித்தாலப்பாக்கத்திலும் முதல்வர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

தற்போது ஆந்திர மாநிலத்தில் இருந்துவந்து தமிழகத்தில் எம்.டெக். படிக்கும் மாணவர் ஒருவர் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். 2 லட்சமாவது பயனாளியான அவரைச் சந்தித்து நலம் விசாரித்தோம்.

இந்தத் திட்டத்துக்காக தமிழக அரசு இதுவரை செலவிட்டுள்ள தொகை ரூ.173.77 கோடி. இந்தத் திட்டங்கள் மட்டுமல்லாமல் உறுப்பு அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு திட்டங்களில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது என்றார் அவர்.

# டிச.2-இல் முதல்வர் காப்பீட்டுத் திட்ட முகாம்



சென்னை, நவ. 28: முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளை சேர்ப்பதற்கான முகாம் வரும் டிசம்பர் 2-ஆம் தேதி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் ரூ.1.20 லட்சத்துக்கும் மிகாமல் இருப்பவர்களின் குடும்பத்தினருக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1.45 கோடி குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர். இந்நிலையில் புதிய பயனாளிகளை சேர்ப்பதற்கான முகாம் அவ்வப்போது நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

தமிழகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியால் 2009-ஆம் ஆண்டு ஜூலை 23-ஆம் தேதி தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை 1.45 கோடி குடும்பங்கள் மருத்துவக் காப்பீட்டு அட்டை பெற்றுள்ளனர். இத்திட்டத்துக்காக தமிழ்நாடு அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு ரூ.1,546 கோடி செலுத்தப்படுகிறது.

தமிழகத்தில் 1,829 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும் இக்காப்பீட்டுத் திட்டத்தில், மொத்தம் 854 அரசு மருத்துவமனைகளும், 975 தனியார் மருத்துவமனைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், விடுபட்ட குடும்பத்தினரை இணைப்பதற்கான சிறப்பு முகாம் தமிழகம் முழுவதும் 100 இடங்களில் டிச. 2-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

# சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பாக பயணிப்போம்

**சென்னை, நவ. 28:** சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



இதுகுறித்து, அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட 'எக்ஸ்' பதிவு:

கடந்த 2008-ஆம் ஆண்டிலேயே 108 ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கினார் முன்னாள் முதல்வர் கருணாநிதி.

இந்தியாவிலேயே அதிக அளவில் மக்கள்தொகைக்கேற்ப ஆம்புலன்ஸ் சேவைகள் தமிழ்நாட்டில் இருந்தாலும், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகமாக இருந்தன. அதைக் குறைக்க, 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48' திட்டத்தைக் கடந்த 2021-ஆம் ஆண்டு டிசம்பரில் அறிமுகப்படுத்தினேன்.

இந்த இரண்டு ஆண்டுகளில், 2 லட்சமாவது பயனாளிக்கு செவ்வாய்க்கிழமை மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் என்பதைவிட 2 லட்சம் பேரின் உயிர்களும் உடலுறுப்புகளும் காக்கப்பட்டுள்ளன.

சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்வோம். குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம் என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

# தேசிய ஆடவர் ஹாக்கி: பஞ்சாப் சாம்பியன்




பஞ்சாப் அணிக்கு வெற்றிக் கோப்பையை வழங்கிய
தமிழக இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

## தமிழ்நாடு 3-ஆம் இடம்

**சென்னை, நவ. 28:** சென்னையில் நடைபெற்ற 13-ஆவது தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பில் பஞ்சாப் அணி 'பெனால்ட்டி ஷூட் அவுட்' (9-8) முறையில் ஹரியாணா அணியை வீழ்த்தி சாம்பியன் ஆனது.

எழும்பூரில் உள்ள மேயர் ராதா கிருஷ்ணன் மைதானத்தில் கடந்த 17-ஆம் தேதி தொடங்கிய இப்போட்டி, செவ்வாய்க்கிழமை இறுதிக்கட்டத்தை எட்டியது. சாம்பியன் கோப்பையை கைப்பற்றுவதற்கான இறுதி ஆட்டத்தில் பஞ்சாப் - ஹரியாணா அணிகள் மோதின. இரு அணிகளிடையே விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டம், நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் 2-2 கோல் கணக்கில் டிரா ஆனது.

பஞ்சாபுக்காக ஹர்ஜீத் சிங் (13'), ஹர்மன்பிரீத் சிங் (42') ஆகியோரும், ஹரியாணாவுக்காக சஞ்சய் (25'), ரஜந்த் (50') ஆகியோரும் கோலடித்தனர்.

இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனால்ட்டி ஷூட் அவுட் வாய்ப்பில் முதல் 5-இல் இரு அணிகளுமே தலா 3 கோல்களுடன் சமநிலையில் இருந்தன. இதில் பஞ்சாபுக்காக ஹர்மன்பிரீத் சிங், சிம்ரன்ஜீத் சிங், சுக்ஜீத் சிங் ஆகியோரும், ஹரியாணாவுக்காக சஞ்சய், தீபக், அபிஷேக் ஆகியோரும் கோலடித்தனர்.

பின்னர் தொடர்ந்த 'சடன் டெத்' முறையிலும் முதல் 5 வாய்ப்புகளில் இரு அணிகளுமே தலா ஒவ்வொரு கோலுடன் சளைக்காமல் இணையாக முன்னேறி வந்தன. இறுதியில் 6-ஆவது வாய்ப்பை ஹரியாணா தவறவிட, அதில் பஞ்சாப் கோலடித்து 9-8 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் ஆனது.

சடன் டெத் முறையில் பஞ்சாபுக்காக ஹர்மன்பிரீத் சிங், சிம்ரன்ஜீத் சிங் (2), ஆகாஷ்தீப் சிங், சுக்ஜீத் சிங், தில்பிரீத் சிங் ஆகியோர் கோலடிக்க, ஹரியாணா தரப்பில் அபிஷேக், சஞ்சய், தீபக், ரஜந்த், யஷ்தீப் சிவச் ஆகியோர் ஸ்கோர் செய்தனர்.

**தமிழ்நாடு வெற்றி:** முன்னதாக, 3-ஆவது இடத்துக்காக நடைபெற்ற ஆட்டத்தில் தமிழ்நாடு அணி 'பெனால்ட்டி ஷூட் அவுட்' வாய்ப்பில் கர்நாடகத்தை வீழ்த்தியது.

முன்னதாக அந்த ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் முடிவில் 3-3 கோல் கணக்கில் டிரா ஆனது. தமிழ்நாடு அணிக்காக சோமன்னா (4'), சுந்தரபாண்டி (40'), கார்த்தி (52') ஆகியோரும், கர்நாடக அணிக்காக ஷேஷே கௌடா (12'), ஹரீஷ் முதாகர் (34'), முகமது ரஹீல் (38') கோலடித்தனர்.

பின்னர் 'பெனால்ட்டி ஷூட் அவுட்' வாய்ப்பில் தமிழ்நாடு 5-3 கோல் கணக்கில் வென்று, வெண்கலப் பதக்கம் பெற்றது. தமிழ்நாடு அணிக்காக ஜோஷுவா பெனடிக்ட் வெஸ்லி, கனகராஜ் செல்வராஜ், தனுஷ், சுந்தரபாண்டி, ஷியாம் குமார் ஆகியோர் கோலடித்தனர்.

# கடற்படைக்கு உள்நாட்டு தயாரிப்பில் 2-ஆவது விமானந்தாங்கி போர்க் கப்பல்

## பாதுகாப்பு கொள்முதல் வாரியம் ஒப்புதல்

**புது தில்லி, நவ. 28:** இந்திய கடற்படைக்கு ரூ.40,000 கோடி மதிப்பில் இரண்டாவது விமானந்தாங்கி போர்க் கப்பலை உள்நாட்டில் கட்டும் முன்மொழிவுக்கு பாதுகாப்பு கொள்முதல் வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதன் பின்னணியில், மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டில் கட்டப்பட்ட இந்தியாவின் முதல் விமானந்தாங்கி போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த், கடந்த செப்டம்பரில் பிரதமர் மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அதிநவீன வான் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை கட்டமைப்புடன் கூடிய இந்த பிரம்மாண்ட போர்க் கப்பல் கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தால் ரூ.23,000 கோடி செலவில் கட்டப்பட்டதாகும். இது 30 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் இயங்கக் கூடிய திறன் கொண்டது.

262 மீட்டர் நீளம், 62 மீட்டர் அகலம், 59 மீட்டர் உயரம் கொண்ட இக்கப்பலில் 2,300-க்கும் மேற்பட்ட அறைகள் உள்ளன.

இந்தியாவிடம் தற்போது ஐஎன்எஸ் விக்ரமாதித்யா (ரஷிய தயாரிப்பு) மற்றும் ஐஎன்எஸ் விக்ராந்த் ஆகிய 2 விமானந்தாங்கி போர்க் கப்பல்கள் உள்ளன.

ஆனால், இந்தியப் பெருங்கடல் பகுதியில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள இந்திய கடற்படைக்கு மேலும் ஒரு விமானந்தாங்கி போர்க் கப்பல் வேண்டுமென்பது கடற்படையின் கோரிக்கையாக உள்ளது.

இந்நிலையில், ரூ.40,000 கோடி செலவில் இரண்டாவது உள்நாட்டு தயாரிப்பு விமானந்தாங்கி போர்க் கப்பலை கட்டும் முன்மொழிவுக்கு பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு கொள்முதல் வாரியம் (டிபிபி) கொள்கைரீதியில் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், 'பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்பு கொள்முதல் கவுன்சிலின் (டிஏசி) கூட்டம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. பாதுகாப்பு கொள்முதல் வாரியம் ஒப்புதல் வழங்கியிருப்பதால், கடற்படையின் முன்மொழிவை உரிய முறையில் பரிசீலித்து, கொள்முதல் கவுன்சிலும் ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல், விமானப் படைக்கு ரூ.1.15 லட்சம் கோடி மதிப்பில் 87 தேஜஸ் மார்க்-1ஏ போர் விமான கொள்முதலுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட வாய்ப்புள்ளது' என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

# 23 கோடி டன்னாக அதிகரித்த பால் உற்பத்தி



புது தில்லி, நவ. 28: இந்தியாவின் பால் உற்பத்தி கடந்த 2022–23–ஆம் நிதியாண்டில் 23.06 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

இது குறித்து மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2022 ஏப்ரல் மாதம் தொடங்கி, 2023 மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் பால் உற்பத்தி 23.06 கோடி டன்னாக இருந்தது.

இது, முந்தைய 2021-23 ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில் 3.83 சதவீதம் அதிகமாகும்.

இதன் மூலம் நாட்டின் பால் உற்பத்தி கடந்த 2018-19 ஆம் நிதியாண்டில் 6.47 சதவீத வருடாந்திர வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

பின்னர் இந்த வளர்ச்சி 2019–20–ஆம் நிதியாண்டில் 5.69 சதவீதமாகவும், 2020-21 ஆம் நிதியாண்டில் 5.81 சதவீதமாகவும் இருந்தது.

மதிப்பீட்டு நிதியாண்டுக்கு முந்தைய 2021-22 ஆம் நிதியாண்டில் பால் உற்பத்தியில் வருடாந்திர வளர்ச்சி 5.77 சதவீதமாக இருந்தது.

கடந்த 2022–23–ஆம் நிதியாண்டில் அதிக பால் உற்பத்தி செய்த மாநிலமாக உத்தர பிரதேசம் இருந்தது. மொத்த பால் உற்பத்தியில் இந்த மாநிலத்தின் பங்கு 15.72 சதவீதமாக உள்ளது.

பால் உற்பத்தியில் உத்தர பிரதேசத்தைத் தொடர்ந்து ராஜஸ்தான் 14.44 சதவீதமும், மத்திய பிரதேசம் 8.73 சதவீதமும் பங்கு வகிக்கின்றன.

மதிப்பீட்டு நிதியாண்டின் பால் உற்பத்தியில் குஜராத்தின் பங்கு 7.49 சதவீதமாகவும் உள்ளது; ஆந்திர பிரதேசம் பங்கு 6.70 சதவீதம் ஆகும்.

பால் உற்பத்தியில் வருடாந்திர வளர்ச்சி விகிதத்தைப் பொருத்தவரை, கர்நாடகம் 8.76 சதவீதம் என்ற மிக உயர்ந்த வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. அதைத் தொடர்ந்து மேற்கு வங்கம் 8.65 சதவீதமும், உத்தர பிரதேசம் 6.99 சதவீதமும் பால் உற்பத்தியில் வருடாந்திர வளர்ச்சியைக் கண்டன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## முட்டை உற்பத்தி 33% உயர்வு

கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் முட்டை உற்பத்தி 33.31 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.

இது குறித்து அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த 2022-23 ஆம் நிதியாண்டில் நாட்டின் முட்டை உற்பத்தி மொத்தம் 13,838 கோடியாக உள்ளது. இந்த எண்ணிக்கை, 2018-19 ஆம் நிதியாண்டின் முட்டை உற்பத்தியோடு (10,380 கோடி) ஒப்பிடுகையில் 33.31 சதவீதம் அதிகமாகும்.

2021–22–ஆம் நிதியாண்டோடு ஒப்பிடுகையில் மதிப்பீட்டு ஆண்டில் முட்டை உற்பத்தி 6.77 சதவீதம் அதிகரித்துள்ளது.

முட்டை உற்பத்தியில் ஆந்திரப் பிரதேசம் 20.13 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு 15.58 சதவீதம் பங்கு வகிக்கிறது. தெலங்கானா 12.77 சதவீதமும், மேற்கு வங்கம் 9.94 சதவீதமும் முட்டை உற்பத்தி செய்தன.

2022-23 ஆம் நிதியாண்டின் முட்டை உற்பத்தியில் கர்நாடகத்தின் பங்களிப்பு 6.51 சதவீதமாக இருந்தது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் சைபர் குற்றங்கள் அதிகரிப்பும்...

நாட்டில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரிப்பதற்கு ஏற்ப சைபர் குற்றங்களும் அதிகரித்துக் கொண்டே இருப்பதை மத்திய, மாநில அரசுகளின் புள்ளிவிவரங்களும், பல்வேறு ஆய்வுத் தகவல்களும் உறுதிப்படுத்துகின்றன. அது தொடர்பான ஒரு பார்வை...

- நாடு முழுவதும் 113 கோடி கைப்பேசிகளை மக்கள் பயன்படுத்துகின்றனர்.
- நாட்டின் மொத்த மக்கள்தொகையில் பாதிபேர் இணையதளத்தை பயன்படுத்துகின்றனர்.
- அறிதிறன்பேசி வைத்திருப்போர் ஒரு நாளுக்கு சராசரியாக 2 மணி நேரம் 15 நிமிஷம் செயலிகளில் செலவிடுவதாக சர்வதேச ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



- யுபிஐ பணப் பரிவர்த்தனையில் மட்டும் மாதந்தோறும் ரூ.200 கோடி அளவில் மோசடிகள் நடைபெறுகின்றன.
- அறிதிறன்பேசியை 45 சதவீதம் பேர் பணப்பரிவர்த்தனைக்கு பயன்படுத்துகின்றனர்.



- நாட்டில் 46.7 கோடி பேர் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர்.



- சைபர் குற்றங்களால் ஒரு நாளுக்கு மக்கள் பணம் ரூ.100 கோடி பறிபோவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
- சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது 76.8 சதவீதம் அதிகரிப்பு.
- சைபர் குற்றம் தொடர்பாக கடந்த ஆண்டு சுமார் 6 லட்சம் புகார்களை பொதுமக்கள் அளித்துள்ளனர் என மத்திய குடிமக்கள் நிதி, சைபர் மோசடி புகார் மற்றும் மேலாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.
- சைபர் குற்றங்கள் கடந்த 3 ஆண்டுகளில் நாட்டில் 350 சதவீதம் அதிகரித்துள்ளது.



- சைபர் குற்றங்களால் 2015-ஆம் ஆண்டுமுதல் 2021-ஆம் ஆண்டு வரை பொதுமக்களின் பணம் ரூ.2.50 லட்சம் கோடி அபகரிக்கப்பட்டுள்ளது.

- சைபர் குற்றங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு சராசரியாக 50 சதவீதம் வரை அதிகரிப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவிக்கிறது.
- மோசடி அழைப்புகளும், மோசடி குறுஞ்செய்திகளும் ஆண்டுக்கு 18 சதவீதம் வரையில் அதிகரிக்கிறது.
- ஒருவரது கைப்பேசி எண்ணுக்கு சராசரியாக ஒரு மாதத்துக்கு 61 மோசடி அல்லது தேவையற்ற அழைப்புகள் வருகின்றன.



- கணினி, கைப்பேசி உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மூலமாக 35 வகையான சைபர் குற்றங்கள் நடைபெறுகின்றன.
- புதுதில்லி, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஆண்டுக்கு 17 சதவீதத்தில் இருந்து 20 சதவீதம் வரை கணினி, அறிதிறன்பேசி மூலம் நடைபெறும் பணம் மோசடிகள் அதிகரிக்கின்றன.
- 59 சதவீதத்தில் இருந்து 70 சதவீதம் வரையிலான வழக்குகளின் விசாரணை நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் சைபர் குற்றங்களில் தொடர்புடைய 19,654 கைப்பேசி எண்கள் காவல்துறையால் முடக்கப்பட்டுள்ளன.
- 17 சதவீதத்தில் இருந்து 31% வரையிலான வழக்குகள், தடயங்கள் கிடைக்கவில்லை, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை, துப்புதுலக்க முடியவில்லை என முடித்து வைக்கப்படுகிறது.
- 4 சதவீதத்தில் இருந்து 10% வரையிலான வழக்குகளிலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது.



- ஒரு சதவீதத்துக்கு குறைவான சைபர் குற்ற வழக்குகளிலேயே குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கிறது.

தொகுப்பு: கே. வாசுதேவன்

# முதலீட்டாளர்களின் முதல் தேர்வு தமிழ்நாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை/பெரம்பலூர், நவ.28: முதலீட்டாளர்களின் முதல் தேர்வாக தமிழ்நாடு திகழ்கிறது என்றும், உலக முதலீட்டாளர் மாநாட்டில் பங்கேற்க தமிழ்நாட்டை நோக்கி சர்வதேச தொழில் நிறுவனங்கள் வர இருப்பதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் கோத்தாரி பீனிக்ஸ் நிறுவனம் சார்பில், ரூ. 400 கோடி முதலீட்டில் கட்டப்பட்ட ஜெ.ஆர்-1 பீனிக்ஸ் கோத்தாரி காலணி உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையை சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அப்போது, அவர் பேசியதாவது:

பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் கடந்த ஆண்டு நவம்பரில் சிப்காட் தொழிற்பூங்கா திறக்கப்பட்டது. அப்போது, பீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவுக்கும் அடிக்கல் நாட்டினேன்.

**முதல் தேர்வு தமிழ்நாடு:** முதலீட்டாளர்களின் முதல் தேர்வாக தமிழ்நாடு திகழ்கிறது. மாநிலத்தில் முதலீடுகளுக்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதுதான் இதற்கு முக்கியக் காரணம். இங்கு வணிகம் செய்வது எவ்வளவு எளிதாக இருக்கிறது என்பதும், முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு எப்படித் திகழ்கிறது என்பதற்கும் பெரம்பலூரில் நடைபெறும் நிகழ்ச்சியே கண்கூடான சாட்சி.

வளர்ச்சித் திட்டங்கள் என்பது வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். தோல், காலணித் துறைகளைப் பொறுத்தவரைக்கும் திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு தமிழ்நாடு காலணி, தோல் பொருள்கள் கொள்கையை வெளியிட்டேன். இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகு இந்தத் துறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

**நம்பிக்கை வளர்கிறது:** தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பார்க்கும்போது, 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைகிற நம்பிக்கை எங்களுக்கு அதிகரித்துள்ளது.

காலணி, தோல் பொருள்கள் உற்பத்தித் துறையில் தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்த வேண்டும். இன்னும் பல பன்னாட்டு நிறுவனங்களை ஈர்க்க வேண்டும் என்ற உந்துதல் காரணமாக, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

புதிய காலணி தொழிற்சாலைத் திட்டத்தின் மூலமாக, பெரம்பலூர், அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**தமிழ்நாட்டை நோக்கி...** தமிழ்நாட்டில் புதிய ஆலைகள் தொடங்கப்படுவதன் மூலம் முதலீட்டாளர்களின் பெருநம்பிக்கை விதைக்கப்படுகிறது. இதற்கெல்லாம் மணிமகுடமாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வரும் ஜனவரியில் சென்னையில் நடத்த உள்ளோம்.

உலகம் முழுவதும் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வர இருக்கின்றன என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மக்களவை உறுப்பினர்கள் ஆ.ராசா, தொல். திருமாவளவன், தொழில் துறைச் செயலர் அருண் ராய், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே. விஷ்ணு, சிப்காட் மேலாண் இயக்குநர் கி. செந்தில் ராஜ், பெரம்பலூர் தொகுதி எம்எல்ஏ ம. பிரபாகரன், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் ச. சியாமளாதேவி, மாவட்ட ஊராட்சித் தலைவர் சி. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத் தலைவர் ரபீக் அகமது வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் க. கற்பகம் நன்றி கூறினார்.




பெரம்பலூர் காலணி ஆலையை சென்னையில் இருந்து காணொலி மூலம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின்.

## காலணி உற்பத்தியில் புதிய திட்டங்கள்

காலணி உற்பத்தித் துறையில் புதிய திட்டங்களால் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

பெரம்பலூரில் புதிய காலணி ஆலையை காணொலி மூலம் தொடங்கிவைத்து முதல்வர் பேசியதாவது:

ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கத்தில் ரூ. 400 கோடியில் 250 ஏக்கர் பரப்பில் காலணி உற்பத்திப் பூங்கா அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 20,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சிப்காட் அல்லது சிட்கோ, பொது, தனியார் பங்கேற்பு மூலமாக தொழிற்பூங்காக்கள் வடிவில் ஆயத்த தொழிற்கூடங்கள் அமைக்கப்படும். அவற்றில் புதிய தோல் அல்லாத காலணி உற்பத்திக்கான பல்வேறு தொகுப்புகளை அரசு உருவாக்க இருக்கிறது.

பெரம்பலூரில் முதல் கட்டமாக ரூ. 400 கோடி முதலீட்டை கோத்தாரி குழுமம் செய்துள்ளது. 2028-ஆம் ஆண்டுக்குள் அந்த நிறுவனம் மேலும் ரூ. 2,440 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம் 29,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

# தமிழ்ப் பல்கலைக்கழக கரிகால் சோழன் விருதுக்கு 6 பேர் தேர்வு

**தஞ்சாவூர், நவ. 28:** தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 2021, 2022-ஆம் ஆண்டுகளுக்கான கரிகால் சோழன் விருதுக்கு 6 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையில் சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளை சார்பில் நிறுவப்பட்டுள்ள தமிழவேள் கோ.சாரங்கபாணி ஆய்விருக்கையின் மூலம் 2010-ஆம் ஆண்டு முதல் கரிகால் சோழன் விருதுகள் வழங்கப்படுகின்றன.

தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் விருதுகள் குறித்த செய்திக்குறிப்பு:2021-க்கானவிருதாளர்களாக, 'இளந்தமிழன் சிறுகதைகள்' நூலுக்காக இளந்தமிழன் (மலேசியா), 'அம்பரம்' புதினத்துக்காக ரமா சுரேஷ் (சிங்கப்பூர்), 'ஆதுரசாலை' புதினத்துக்காக சிவ. ஆரூரன் (இலங்கை) ஆகியோரும், 2022-க்கான விருதாளர்களாக, 'உள்ளங்கைக் கடவுளும் அஜந்தா பேரழகியும்' கவிதை நூலுக்காக எம். கருணாகரன் (மலேசியா), 'துமாசிக்' சிறுகதைத் தொகுப்புக்காக பொன். சுந்தரராசு (சிங்கப்பூர்), 'பண்ணையில் ஒரு மிருகம்' புதினத்துக்காக நோயல் நடேசன் (இலங்கை) ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தென்கிழக்காசியாவிலும், தெற்காசியாவிலும் வாழ்ந்து வரும் தமிழ்ப் படைப்பாளிகளை உலகுக்கு அடையாளம் காட்ட வேண்டும் என்கிற முஸ்தபாவின் உயரிய எண்ணம்தான் இவ்விருதுகளைத் தொடர்ந்து வழங்கக் காரணமாக உள்ளது.

புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளிகள் மத்தியில் தனித்த மதிப்பையும் உயரிய இடத்தையும் உருவாக்கியிருக்கும் 'கரிகால் சோழன் விருதுகள்' வழங்கும் விழா தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக பனுவல் அரங்கத்தில் வரும் டிசம்பர் 5-ஆம் தேதி நடைபெறுகிறது.

# 93,000 தெரு நாய்களுக்கு தடுப்பூசி

**சென்னை, நவ.28:** சென்னை மாநகராட்சியில் 93 ஆயிரம் தெரு நாய்களுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் நாய் கடித்ததில் பலர் பாதிக்கப்பட்டதையடுத்து, சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள தெரு நாய்களுக்கு மாநகராட்சி பொதுசுகாதாரத் துறை, கால்நடை மருத்துவப்பிரிவு சார்பில், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாம் கடந்த திங்கள்கிழமை தொடங்கியது. இதில் 7 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் 5 நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் உள்ளனர். இவர்கள் தினமும் 900 தெருநாய்களுக்கு தடுப்பூசி செலுத்துவர். இதன் மூலம் அனைத்து மண்டலங்களிலும் தொடர்ந்து 121 வேலைநாள்களில் 93 ஆயிரம் தெருநாய்களுக்கு தடுப்பூசி போடப்படும்.

தற்போது மேற்கொள்ளப்படும் நாய்கள் கணக்கெடுப்புப் பணி நிறைவடையும் போது சென்னையில் தெருநாய்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது.

**மாநகராட்சி தகவல்**



சென்னை புளியந்தோப்பு நாய் இனக் கட்டுப்பாட்டு மையத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன்.

**7 பேரை கடித்த நாய்:** இந்த நிலையில் வியாசர்பாடி, எம்.கே.பி. நகரில் ஒரு நாய் 7 பேரை கடித்த நிலையில் உடனே அதன் குட்டிகளுடன் பிடித்து புளியந்தோப்பு நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட ஆய்வில் வெறிநாய்க்கான அறிகுறி இல்லை. அதன் குட்டிகளுக்கு எந்த பிரச்னையும் ஏற்படக் கூடாது என்பதற்காக பிறரை கடித்துள்ளது தெரிய வந்தது. இருப்பினும், இந்த நாய் 10 நாள்களுக்கு தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். பிடிக்கப்பட்ட நாய்களை மாநகராட்சி ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# மோசடி நிறுவனங்களின் ஆவணங்களை ஆய்வு செய்ய நிபுணர்கள்

## பொருளாதார குற்றப் பிரிவுக்கு அதிகாரம்

**சென்னை, நவ. 28:** தமிழகத்தில் பண மோசடியில் ஈடுபடும் நிறுவனங்களின் ஆவணங்களை விரைந்து ஆய்வு செய்யும் வகையில், தடயவியல், தொழில்நுட்ப தணிக்கை நிபுணர்களைப் பயன்படுத்திக்கொள்ள பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு அதிகாரம் அளித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் ஆருத்ரா, ஹிஜாவு, எல்என்எஸ் இன்டர்நேஷனல் பைனான்சியல் பிரைவேட் லிமிடெட், எல்பின், அம்ரோ கிங்ஸ் லிமிடெட், ஏஆர்டி ஜுவல்லர்ஸ், சிவிஆர்எஸ் சிட்ஸ் உள்பட 8 பெரிய நிதி நிறுவனங்கள் தமிழகம் முழுவதும் 2.50 லட்சத்துக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடம் இருந்து ரூ. 25,000 கோடி வரை வசூலித்து மோசடியில் ஈடுபட்டுள்ளது. இந்த மோசடி நிதி நிறுவன நிர்வாகிகள், முகவர்கள் என சுமார் 95 பேர் இது வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

**பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு அதிகாரம்:** இது தொடர்பாக விசாரணை செய்யும் பொருளாதாரக் குற்றப்பிரிவு, மோசடி நிதி நிறுவனங்கள், அதன் இயக்குநரகளின் வீடு, அலுவலகங்களில் சோதனை நடத்தி ஏராளமான சொத்து ஆவணங்களைப் பறிமுதல் செய்துள்ளனர். இவற்றை குறுகிய காலத்தில் ஆய்வு செய்து, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய நிலை பொருளாதாரக் குற்றப்பிரிவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களை விரைந்து ஆய்வு, தணிக்கை செய்து அறிக்கையை தயார் செய்ய வேண்டும். ஆனால் இந்தப் பணி மிகவும் சவாலானதாகும்.

இதை எளிமைப்படுத்தி, மேம்படுத்தும் வகையில் மென்பொருள்களைப் பயன்படுத்தி ஆய்வு செய்ய பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார், தடயவியல், தொழில்நுட்ப தணிக்கை நிபுணர்களின் உதவியை பயன்படுத்திக்கொள்ள கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம்,

முறைசாரா முதலீடுகள் தடைச் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதாரக் குற்றப்பிரிவினர் தெரிவித்தனர்.

**பணிச்சுமை குறையும்:** இதற்கான அரசாணையை தமிழக அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே இந்த வகை நடவடிக்கையை மத்திய புலனாய்வு அமைப்புகளான சிபிஐ, அமலாக்கத் துறை, வருமான வரித் துறை புலனாய்வு பிரிவு ஆகியவை செய்து வருகின்றன.

தமிழக காவல் துறையில் முதல்முறையாக பொருளாதாரக் குற்றப்பிரிவுக்குதான் இத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மோசடியில் ஈடுபடும் நிதி நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், நகைக் கடைகள், சீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆவணங்கள், சொத்துகள், பதுக்கப்பட்ட முதலீடுகள் குறித்த விரைந்து கண்டறிந்து துப்புதுலக்க முடியும் என காவல் துறையினர் தெரிவித்தனர். இதனால் பொருளாதாரக் குற்றப்பிரிவினர் பணிச்சுமையும் பெருமளவு குறையும் என்றும் அவர்கள் கூறினர்.

# உத்தரகண்ட் சுரங்க விபத்து: 41 தொழிலாளர்கள் மீட்பு

## முடிவுக்கு வந்தது 17 நாள் போராட்டம்

உத்தரகாசி, நவ. 28: உத்தரகண்டில் நிலச்சரிவால் சுரங்கப் பாதையில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் 17 நாள்கள் போராட்டத்துக்குப் பிறகு செவ்வாய்க்கிழமை இரவு பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

சுரங்க இடிபாடுகளுக்கு இடையே கிடைமட்டமாக துளையிட்டு குழாய் செலுத்தும் பணிகள் நிறைவடைந்த நிலையில், தயார் நிலையில் இருந்த தேசிய மீட்புப் படை வீரர்கள் குழு குழாய்க்குள் சென்று தொழிலாளர்களை மீட்டு வந்தனர்.

17 நாள்களாக நீண்ட காத்திருப்பால் கவலையில் இருந்த உறவினர்கள், மீட்கப்பட்ட தொழிலாளர்களைக் கண்டதும் கண்ணீர்மல்க வரவேற்றனர். அந்தப் பகுதியே உணர்ச்சிப் பெருக்குடன் காணப்பட்டது.

உத்தரகண்டில் உத்தரகாசி மாவட்டத்தில் பிரம்மகால்- யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் சில்க்யாரா, தண்டல்கான் பகுதிகளுக்கு இடையே சுரங்கப் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. சில்க்யாரா பகுதியில் கட்டப்பட்டு வந்த இந்தச் சுரங்கப் பாதையில் கடந்த நவ. 12-ஆம் தேதி திடீரென மண்சரிவு ஏற்பட்டது. இதனால் சுரங்கப் பாதைக்குள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த 41 தொழிலாளர்கள், கடுமையான இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

**60 மீட்டருக்கு 80 செ.மீ. குழாய்:** இதைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் சுவாசிப்பதற்கு மிக நுண்ணிய குழாயில் ஆக்சிஜன் செலுத்தப்பட்டு வந்தது. இடிபாடுகள் வழியாக 6 அங்குலம் அகலமுள்ள சிறிய குழாய் செலுத்தப்பட்டு, அதன்மூலம் உணவு, அதிகப் புரதம் உள்ள உலர்பழ வகைகள் மற்றும் கைப்பேசி, அதற்கான மின்னேற்றிகளும் அனுப்பப்பட்டன.

இந்தக் குழாய் வழியாக அனுப்பப்பட்ட எண்டோஸ்கோப்பி கேமரா மூலம் அனைத்துத் தொழிலாளர்களும் நலமாக இருப்பது விடியோ மூலம் உறுதி செய்யப்பட்டது.



சுரங்கப் பாதை இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட தொழிலாளர்களை நெகிழ்ச்சியுடன் வரவேற்ற உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, மத்திய இணையமைச்சர் வி.கே.சிங்.

இதைத் தொடர்ந்து, இடிபாடுகளுக்கு இடையே 80 செ.மீ. விட்டம் கொண்ட குழாயை 60 மீட்டர் தொலைவுக்குச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான பணிகள் தொடங்கி நடந்து வந்தன. ஜெனீவாவைச் சேர்ந்த சர்வதேச சுரங்கப் பாதை மற்றும் சுரங்கப் பணிகள் சங்கத்தின் தலைவரும் சர்வதேச சுரங்க நிபுணருமான அர்னால்டு டிக்ஸ் மீட்புப் பணியில் கடந்த நவ. 20-ஆம் தேதி இணைந்தார்.

**இடர்ப்பாடுகளுக்கு இடையே...:** குழாயைச் செலுத்துவதற்கு துளையிடப்பட்ட பாதையில் இரும்புக் கம்பிகள் குறுக்கிட்டது, துளையிடும் 'ஆகர்' இயந்திரம் நிறுவப்பட்டிருந்த கான்கிரீட் தளத்தில் விரிசல் ஏற்பட்டது உள்ளிட்ட பல்வேறு இடையூறுகளால் மீட்புப் பணிகள் அவ்வப்போது நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டன.

கான்கிரீட் தளத்தில் உண்டான விரிசல் சீர்செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீண்டும் பணிகள் தொடங்கப்பட்டன. தொடங்கிய ஒரு மணி நேரத்தில் ஆகர் இயந்திரத்தின் பிளேடுகள் கான்கிரீட்-எஃகு கம்பி இடிபாடுகளில் சிக்கிக் கொண்டன. இதனால் கிடைமட்டமாக குழாய் செலுத்தும் பணிகள் முழுவதுமாக முடங்கின.

இதனிடையே, மலையின் மேல் பகுதியிலிருந்து செங்குத்தாகத் துளையிட்டு 86 மீட்டர் ஆழத்துக்கு குழாயைச் செலுத்தி தொழிலாளர்களை மீட்பதற்கான மாற்றுத் திட்டமும் தொடங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், கிடைமட்டமாக குழாயைச் செலுத்தும் மீட்புத் திட்டத்தில் மீதமுள்ள 10-12 மீட்டர் தொலைவுக்கு மண் மற்றும் இடிபாடுகளை அகற்ற, 'எலிவளை சுரங்க முறை' தோண்டுதலில் நிபுணத்துவம் பெற்ற 12 பேர் அடங்கிய சுரங்கத் தொழில் பணியாளர்கள் குழு மூலம் நேரடியாகத் துளையிட்டு குழாயைச் செலுத்த திட்டமிடப்பட்டது. அதற்காக ராணுவத்தின் சென்னை கட்டுமானப் படைப் பிரிவைச் சேர்ந்த பொறியாளர்கள் குழு வீரர்களின் உதவியுடன் இயந்திரத்தின் உடைந்த முனைப் பகுதிகள் அகற்றப்பட்டன.

**17-ஆவது நாளில் இறுதிக்கட்டம்:** இதையடுத்து, துளையிடும் பணியில் 'எலிவளை சுரங்க முறை' பணியாளர்கள் கடந்த 2 நாள்களாக ஈடுபட்டு வந்தனர். அந்தப் பணிகள் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் இறுதிக்கட்டத்தை எட்டின.

மீட்புப் பணிகளின் இறுதிக் கட்டத்தில், உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி சம்பவ இடத்துக்கு வருகை தந்து குழாய் பதிக்கும் பணிகளைப் பார்வையிட்டார். மீட்கப்படும் தொழிலாளர்களை விரைவாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வகையில், மழை காரணமாக சேதமடைந்த சாலைகள் செப்பனிடப்பட்டன.

**'வெளிச்சம்' கண்ட 41 தொழிலாளர்கள்:** ஆகர் இயந்திரத்தின் தோல்வியைத் தொடர்ந்து, கிடைமட்டமாக குழாய் செலுத்தும் மீட்புத் திட்டத்தில் எலிவளை சுரங்க முறை பணியாளர்கள் குழுவினர் மேற்கொண்ட இறுதிக்கட்டப் பணிகளில் 60 மீட்டர் தொலைவுக்கு துளையிடப்பட்டு, குழாய் செலுத்தும் பணிகள் செவ்வாய்க்கிழமை இரவு முழுமையாக நிறைவடைந்தன.

முன்னதாக, மீட்புக் குழாயில் தொழிலாளர்களைக் காயமின்றி பாதுகாப்பாக அழைத்துவர மெத்தைகள் நிறுவப்பட்டன.

அந்தக் குழாய்க்குள் நுழைந்த தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படையினர், தொழிலாளர்களை 2-3 நிமிஷங்கள் இடைவேளையில் ஒருவர் பின் ஒருவராக அழைத்து வந்தனர். அவர்களை முதல்வர் புஷ்கர் சிங் தாமியும், மத்திய இணையமைச்சர் வி.கே.சிங்கும் கட்டித் தழுவி வரவேற்றனர்.

சுரங்கப் பாதைக்குள் பணியமர்த்தப்பட்டிருந்த மருத்துவக் குழு, மீட்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதல்கட்ட மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டது. இதைத் தொடர்ந்து, சில்க்யாரா சுரங்கப் பாதை பகுதியிலிருந்து 30 கி.மீ. தொலைவில், ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 41 படுக்கைகள் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அவசரகால ஊர்திகள் மூலம் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் நலமுடன் உள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுரங்கப்பாதையில் இருந்து தொழிலாளர்கள் வெளியேறத் தொடங்கியதும், சம்பவ இடத்தில் கூடியிருந்த உறவினர்கள், மீட்புப் பணியாளர்கள், பொதுமக்கள் கரகோஷம் எழுப்பி தொழிலாளர்களை வரவேற்றனர். மேலும், மீட்புப் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் அனைவருக்கும் தொழிலாளர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

(மேலும் செய்தி, படங்கள் உள்ளே)

## குடியரசுத் தலைவர், பிரதமர் மகிழ்ச்சி



சுரங்க இடிபாடுகளிலிருந்து தொழிலாளர்கள் மீட்கப்பட்டதை யடுத்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்தச் சவாலான நேரத்தில் தொழிலாளர்களின் குடும்பங்கள் காட்டிய பொறுமையையும் துணிவையும் பாராட்ட வார்த்தைகள் இல்லை என்றும், மீட்புக் குழுவிருக்கு பாராட்டுகள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட தொழிலாளர்களுடன் தொலைபேசி மூலமும் பிரதமர் மோடி பேசினார்.

# 2-ஆம் கட்ட காசி தமிழ்ச் சங்கமம்

# வாரணாசி, அயோத்திக்கு 1,400 பேரை அழைத்துச் செல்ல ஏற்பாடு

KUMAR MAYILSAMY

**சென்னை, நவ. 28:** இரண்டாம் கட்ட காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியின் ஒருபகுதியாக 1,400 பேரை வாரணாசி உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சென்னை ஐஐடி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐஐடி நிர்வாகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பண்டைய இந்தியாவில் கற்றல், கலாசார மையங்களாக திகழ்ந்த வாரணாசிக்கும், தமிழகத்துக்கும் இடையேயான வாழ்க்கை பிணைப்பை புதுப்பிக்கும் வகையில், 'ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத்' என்ற திட்டத்தின் கீழ் காசி தமிழ் சங்கமம் என்ற நிகழ்வு நடத்தப்பட்டது.

தற்போது 2-ஆவது கட்டமாக காசி தமிழ்ச் சங்கமம் டிச.17 முதல் 30-ஆம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இந்த காசி தமிழ் சங்கமத்தில் தமிழகம், புதுச்சேரியில் இருந்து சுமார் 1,400 பேர் வாரணாசி, பிரயாக்ராஜ், அயோத்தி ஆகிய இடங்களுக்கு ரயிலில் சென்று வர 8 நாள்கள் பயணம் திட்டமிடப்பட்டு இருக்கிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், மதம் சார்ந்தவர்கள், தொழில் வல்லுநர்கள் என 200 பேர் கொண்ட குழுவினரை 7 குழுக்களாகப் பிரித்து அனுப்ப உள்ளோம். இதற்கு விண்ணப்பிப்பதற்கான இணையதளத்தை சென்னை ஐஐடி தொடங்கியுள்ளது.

விருப்பம் உள்ளவர்கள் www.kashitamil.iitm.ac.in என்ற இணையதளத்துக்குச் சென்று பதிவு செய்து கொள்ளலாம். இதற்கு விண்ணப்பிக்க டிச.8-ஆம் தேதி கடைசி நாள் ஆகும்.

இரண்டாம் கட்ட காசி தமிழ் சங்கமம் திட்டத்தைச்செயல்படுத்தும் முகமையாக சென்னை ஐஐடி இருக்கிறது.

வாரணாசியில் உள்ள நமோ காட்டில் தமிழகம், காசியின் கலாசாரங்களைப்பிரதிபலிக்கும்நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட உள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.